ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2246/24 - 2021 සැප්තැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2021.09.24
*2246/24 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

*நிர்மாணித்தல், உடமையாக்கல் மற்றும் செயற்படுத்தல் (BOO) அடிப்படையில் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்வலு வளங்களிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்யவும் மற்றும் வழங்குவதற்குமான முன்மொழிவுகளுக்கான அழைப்பு*

**குறிப்பு இலக்கம் : SMRE/DEV/02/55/2021**

*நாட்டின் மின்சக்திக் கலப்பை மீளப் புதுப்பிக்கத்தக்கவைகளை நோக்கி நிலைமாற்றுவதற்கும் மற்றும் இலங்கையில் மீளப் புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களை முதலிடுவதற்கும் மற்றும் அவற்றை நிறுவுவதற்கும் தனியார் துறை முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக சூரிய (மிதக்கும்/ தரையில் ஏற்பட்ட), காற்று (தரையை அடிப்படையாகக் கொண்ட/ கரையோரங்களிலுள்ள - off shore) மற்றும் உயிர் திணிக்கைகள் போன்ற மீளப் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி வளங்களின் ஊடாக மின்சக்தியை அபிவிருத்தி செய்வதற்கும், உற்பத்தி செய்வதற்கும் மற்றும் அத்தகைய மின்சக்தியை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கும் எதிர்கால முதலீட்டாளர்களிடமிருந்து (வெளிநாட்டு மற்றும்/ அல்லது உள்நாட்டு) முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன. தனிப்பட்ட ஒரு கருத்திட்டத்தின் குறைந்தபட்ச மின்னுற்பத்திக் கொள்திறனானது 50 மெவோ ஐ விடக் குறைவாக இருக்கக் கூடாது. அத்துடன் இம்முன்மொழிவுகள் பரிசோதனை செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு குறும்பட்டியலில் உள்ளடக்கப்படும் முதலீட்டாளர்கள் 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சக்திச் சட்டத்தினதும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினதும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.*

*2. எதிர்கால முதலீட்டாளர்கள் "முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆவணம்" (PSD) என அழைக்கப்படும் ஆவணத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். எதிர்கால முதலீட்டாளர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு அவர்களின் வசதிக்காக இதனுடன் படிவத்தின் வரைபு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. எதிர்கால முதலீட்டாளர்கள்*

1A - G 34989 — 40 (2021/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மேலே கூறப்பட்ட சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகளின் கீழும் மற்றும் உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கான தனியார் துறை முதலீடுகளுக்குப் பொருத்தமான "தேசிய கொள்முதல் வழிகாட்டல்களையும்" நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏற்றவாறு "அத்தகைய முன்மொழிவுகளை கருத்திட்டங்களாக கட்டமைக்கும்" நோக்கத்திற்காக முன்மொழிவைச் சமர்ப்பிக்கும் ஆவணத்தில் (PSD) கொடுக்கப்பட்டுள்ள அளவுகோள்களுக்கு ஏற்ப, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் அனைத்து முன்மொழிவுகளும் பரிசோதனை செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் முன்மொழிவுகள் குறும்பட்டியலில் உள்ளடக்கப்படும். தமது முன்மொழிவுகளைக் கருத்திட்டங்களாக இனங்கண்டு "நிர்மாணித்தல், உடமையாக்கல் செயற்படுத்தல்" (BOO) அடிப்படையின் கீழ் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களாக" நடைமுறைப்படுத்தக்கூடிய "கருத்திட்டங்களாக" இனங்காணப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்குரிய எதிர்கால முதலீட்டாளர்கள் (இதன் பின்னர் எதிர்கால கருத்திட்ட ஆதரவாளர் என அழைக்கப்படுவர்), இலங்கை மின்சக்திச் சட்டத்தின் 43(5) ஆம் பிரிவின் கீழும் மற்றும் கூறப்பட்ட தேசிய கொள்முதல் வழிகாட்டலின் கீழும் இலங்கை மின்சார சபையினால் "முன்மொழிவுகளுக்கான கோரிக்கை" (RFP) என அழைக்கப்படும் ஆவணமொன்றின் ஊடாக அத்தகைய கருத்திட்டங்களுடன் தொடர்புடைய அவர்களது விரிவான தொழில்நுட்ப, வர்த்தக மற்றும் நிதி முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுவார்கள்.

3. இம்முன்மொழிவின் செயற்பரப்பை எடுத்துக்காட்டும் "முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆவணம்" (PSD) எனும் தலைப்பிலான ஆவணங்களின் தொகுப்புகளை முதலீட்டாளர்கள் இலங்கை நிலைபெறுதகு அதிகார சபையின் இணையத் தளமான *http://www.energy.gov.lk* இனை அணுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஆவணத்தை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

4. இம்முன்மொழிவுகளை 2021, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ info@energy.gov.lk எனும் மின்னஞ்சல் மூலமாகவோ, அல்லது கீழே உள்ள விலாசத்துக்கு நேரடியாகவோ, தூதஞ்சல் (courier) மூலமோ பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல் தொடர்பான வழிகாட்டல் தொடர்பான ஆரம்பக் கூட்டமானது 2021, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளதோடு, அனைத்து எதிர்கால முதலீட்டாளர்களும் இவ்வழைப்பு தொடர்பான மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இக்கூட்டத்தில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். நிகழ்நிலையில் இடம்பெறவுள்ள தோற்ற நிலைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் மின்னஞ்சல் விலாசத்துக்கு *(info@energy.gov.lk)* மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைக்கவும்.

**ஹேமன்த சமரகோன்,**
செயலாளர்,
சூரியசக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருதிட்ட
அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

இல. 437, காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை.
(அஞ்சல் குறியீடு : 00300)

இணைப்பு

| | | |
|---|---|---|
| **A** | **பொதுத் தகவல்கள்** | |
| A1 | முன்மொழியப்பட்ட கருத்திட்டம்/ மின்நிலையம் | |
| A2 | கருத்திட்டம்/ மின்நிலைய அமைவிடம் | |
| A3 | பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பதவி | |
| A4 | அஞ்சல் முகவரி | |
| | தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் | |
| A5 | அதே மாதிரியான தொழில்நுட்பம் மற்றும் கொள்திறனில் நிறுவனத்தின் அனுபவம் | |
| **B** | **முன்மொழியப்பட்ட மின்னுற்பத்தியின் விபரங்கள்** | |

| | | |
|---|---|---|
| B1 | மின்நிலையத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட நிறுவும் கொள்திறன் (மெவோ) | |
| B2 | உத்தரவாதமளிக்கப்பட்ட மின்சக்தி வெளியீடு/ நாள் (மெவோம) | |
| B3 | வளங்களும் மற்றும் தொழில்நுட்பமும் | |
| B4 | தொடர்பு இணைப்புப் புள்ளி (தெரிந்திருந்தால்) | |
| B5 | தொடர்பு இணைப்பு மின்வலியளவு (Voltage) | |
| B6 | இலங்கை மின்சார சபையின் அனுப்புவதற்கான அறிவுறுத்தல் கடிதம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மின்நிலையத்தை ஒருங்கிணைக்க எடுக்கும் காலம் (தெரிந்திருந்தால்) | |
| B7 | ஒருங்கிணைக்கப்பட்டதன் பின்னர் முழுமையான மின்னோட்டக் கொள்திறனை அடைவதற்கு எடுக்கும் காலம் (தெரிந்திருந்தால்) | |
| B8 | ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டதிலிருந்து வர்த்தக செயற்பாட்டுக்கு எதிர்பார்க்கப்படும் நாட்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | |
| **C** | **வர்த்தக மற்றும் நிதி முன்மொழிவுகள்** | |
| | **கருத்திட்டச் செலவில் குறிப்பிட்டுக் காட்டும் பிரிவுகள்** | |
| C1 | முன்மொழியப்பட்ட மின்நிலையத்தின் செலவு | |
| C2 | நிதியீட்ட வழிமுறைகள் | |
| C3 | மூலதன உள்ளீடு | |
| C4 | கடன் நியதிகள் | |
| C5 | வேறு ஏதாவது மூலம் | |
| C6 | தொடர்புபட்ட நிதி நிறுவனத்தின் பெயரும், விலாசமும் | |
| C7 | ஒப்புக்கொள்ளப்பட்ட கடனின் நிபந்தனைகள் | |
| C8 | மூலதன உள்ளீடு : படுகடன் கட்டமைப்பு | |
| C9 | கடன் வழங்குனரின் தவணை அட்டவணை உள்ளடங்கலாக முன்மொழிவின் படுகடன் நிதியீட்டைப் பூர்த்தி செய்வதற்கான நிதியின் கிடைப்பனவு | |
| **D** | **வேறு ஏதேனும் தொடர்புடைய தகவல்கள்** | |

*10-75*